

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.3.2026) மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நொளம்பூரில் கூவம் ஆற்றங்கரையில் 890 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி மற்றும் 1200 மீட்டர் நீளத்திற்கு சாலை அகலப்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழு தலைவர் நொளம்பூர் வே. ராஜன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), அஃப்தாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.3.2026) மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வளசரவாக்கம் எஸ்.வி.எஸ் நகர் முதல் பிரதான சாலையில் மீட்டெடுக்கப்பட்ட குளத்தை 4.88 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு செய்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நடைபாதை பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழு தலைவர் நொளம்பூர் வே. ராஜன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), அஃப்தாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில், 4 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.110 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்:

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்னும் ஏராளமான திட்டங்கள்; திராவிட மாடல் 2.0-இல் நிச்சயம் நம் முதலமைச்சர் வழங்குவார்!

## தூத்துக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**தூத்துக்குடி,மார்ச்.9-**

**தூத்துக்குடி மாவட்டத்தில், நடைபெற்ற அரசு விழாவில் சுமார் 4,000 பயனாளிகளுக்கு சுமார் ரூ.110 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**மேலும், விளையாட்டுக் கட்டமைப்புகள் - வகுப்பறைக் கட்டடங்கள் என முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததுடன் பல்வேறு புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.**

**விழாவில் பேசிய அவர், ``தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்னும் ஏராளமான திட்டங்களை, திராவிட மாடல் 2.0-இல் நிச்சயம் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு வழங்குவார். ஆகவே நம் முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் எப்போதும் போல உங்களின் ஆதரவைத் தர வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இன்றைக்கு தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். மூன்றே நாட்களில் இவ்வளவு சிறப்பான மிகப்பெரிய ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்துக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இங்கே வந்திருக்கக்கூடிய பயனாளிகளின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குழந்தைகள் நலப்பிரிவு

இந்த விழாவுக்கு வருவதற்கு முன்பு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `உயர்தர சிறப்பு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு' (Super Speciality Hospital for Infant care and Maternal Care) கட்டடத்தையும், திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதேபோன்று உயர்தர சிறப்பு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடத்தையும் திறந்து வைத்துவிட்டுத்தான் இன்று இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

இந்த புதிய மருத்துவக் கட்டமைப்புகள் தூத்துக்குடி மாவட்ட மக்களாகிய உங்களுக்கு நிச்சயம் மிகப்பெரிய உதவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மருத்துவமனைகளின் சேவைகளை நல்லபடியாக, சிறப்பாக நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

### மீன்பிடித் தொழில்

தூத்துக்குடி என்று சொன்னாலே துறைமுகம், உப்பளம், தொழில் வளர்ச்சி, விவசாயம், மீன்பிடித் தொழில் என்று அனைத்து வகையிலும் சிறந்து விளங்கும் ஊர் இந்த தூத்துக்குடி. தொழில் வளர்ச்சியில் இன்றைக்கு சென்னையுடன் போட்டி போடும் அளவுக்குத் தூத்துக்குடி மிக மிக வேகமாக முன்னேறி வந்து கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் தூத்துக்குடி மாவட்ட மக்களாகிய உங்களின் உழைப்பும் ஒற்றுமையும்தான் இந்த வளர்ச்சிக்கான காரணம். இன்றைக்கு இந்த நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சியில் 4,000 பயனாளிகளுக்கு 110 கோடி ரூபாய் அளவிலான அரசுத் திட்டங்களை வழங்க இருக்கிறோம். எனவே இந்த நிகழ்ச்சியில் பங்குபெறுவதற்கு ஆயிரக்கணக்கில் நீங்கள் வந்திருக்கிறீர்கள். இன்னும் பெருமை என்னவென்றால், அதிலும் மகளிர் நிறைய பேர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என் வாழ்த்துகள். இன்றைக்கு தமிழ்நாடு பொருளாதாரத்தில் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றால், அதற்கு இங்கு இருக்கக்கூடிய மகளிர், அவர்களின் உழைப்பு மிகப்பெரிய முக்கியமான ஒரு காரணம்.

### மகளிருக்கு என்ன தேவை?

அதனால்தான் நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து ஒவ்வொரு திட்டத்தையும் மகளிருக்கு என்னென்ன தேவை என்று பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்ட கையெழுத்து. இன்றைக்கு அந்தத் திட்டத்தின் கீழ் 960 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் சுமார் 12 கோடி பயணங்களை மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் மூலம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

காலையில் எழுந்ததும் வேலைக்கு செல்லும் பெண்களுக்கு, குறிப்பாகப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதற்கு முன்பு சமைப்பதற்கு நேரம் இருக்காது. அந்த சிரமத்தைப் போக்குவதற்காக நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

தமிழ்நாடு முழுவதும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் 52,000 குழந்தைகள் இந்த முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.








### ‘தமிழ்ப் புதல்வன் திட்டம்’

அடுத்து அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி சேருகின்ற மாணவிகளுக்குப் ‘புதுமைப் பெண் திட்டம்’, மாணவர்களுக்குத் `தமிழ்ப் புதல்வன் திட்டம்’ என்று மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத் தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். இந்தத் திட்டத்தின் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் சுமார் 17,000 மாணவ மாணவிகள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

நம் முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன் திட்டம்’ தொடங்கப்பட்ட பிறகு இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் ஏராளமான வேலைவாய்ப்புகளை நம் இளைஞர்களுக்கு நாம் உருவாக்கி இருக்கிறோம். நேற்று நீங்கள் செய்திகளில் பார்த்திருப்பீர்கள், ஒன்றிய அரசினுடைய யு.பி.எஸ்.சி (UPSC) தேர்வு முடிவுகள் வெளியாகி வந்திருக்கின்றன. இதில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் அகில இந்திய அளவில் ‘டாப் 10’ (Top 10) தரவரிசையில் இடம் பிடித்திருக்கிறார்கள். அதில் இரண்டாம் இடத்தை நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மாணவி பிடித்துள்ளார். இவர்கள் இரண்டு பேருமே அரசு கொண்டு வந்த ‘நான் முதல்வன் திட்டத்தின் பயனாளிகள்’.

### நம் முதலமைச்சரின் வெற்றி

இதுதான் திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் வெற்றி. இதே போல இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் 10 லட்சம் மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்குகின்ற திட்டத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் சுமார் 12,000 மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக மகுடம் வைத்தது போல ஒரு திட்டம், அதுதான் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்’. அந்தத் திட்டத்தின் கீழ் இன்றைக்குக் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் 3 லட்சத்து 24 ஆயிரம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்.

நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் இந்த மகளிர் உரிமைத் திட்டத்தை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவதாகவும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

### ஒரு கோடியே 32 லட்சம் மகளிர்

தேர்தலைக் காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை முடக்குகிறோம் என்று சில பேர் முயற்சியில் ஈடுபட்டார்கள். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் அந்த முயற்சியை முறியடித்துக் காட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும் வியக்கின்ற வகையில் ஒவ்வொரு மகளிரின் வங்கிக் கணக்கிலும் ஒரு கோடியே 32 லட்சம் மகளிரின் கணக்கிலும் கடந்த மாதம் 5,000 ரூபாயைச் செலுத்தியிருக்கிறார்கள். அதேபோல கோடைக்கால சிறப்பு நிதியாகக் கைம்பெண், முதியோர், மாற்றுத்திறனாளிகள் என 38 லட்சம் பேருக்கு 2,000 ரூபாய் சிறப்பு நிதியை முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

### தூத்துக்குடி திட்டங்கள்

இந்தத் தூத்துக்குடி மாவட்டத்துக்கும் ஏராளமான திட்டங்களை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது.

2023-இல் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு 102 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,350 வீடுகள் முழுதாகக் கட்டித் தரப்பட்டுள்ளன.

சேதமடைந்த 476 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் 431 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் 4 லட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுமார் 306 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடன்குடியில் 14,000 கோடி மதிப்பீட்டில் அதிக அளவு திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

36 கோடி ரூபாய் செலவில் ‘மினி டைடல் பார்க்’-கும் (Mini Tidel Park) உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இப்படித் தூத்துக்குடி மாவட்டத்துக்கு நம் அரசு செய்திருக்கக்கூடிய திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இது போன்ற திட்டங்களால்தான் இன்றைக்குத் தமிழ்நாடு இந்தியாவிலேயே வளர்ந்து வருகின்ற மாநிலங்களில் முதல் மாநிலமாக 11.19 சதவிகித வளர்ச்சியோடு அந்தச் சிறப்பைப் பெற்றுள்ளது.

### சுயஉதவிக் குழு சகோதரிகள்

இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக மகளிருக்குச் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்தது, நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆரம்பித்து வைத்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளுக்கு இந்த ஐந்து வருடங்களில் மட்டும் சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

மற்றவர்களிடம் வேலை கேட்கும் நிலைமை மாறி, மகளிர் நீங்கள் இன்றைக்கு நான்கு பேருக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு முன்னேறியிருக்கிறீர்கள். அதனால்தான் ஐ.டி. நிறுவனங்களில் கொடுப்பதைப் போல மகளிர் குழு சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் புகைப்படம், பெயருடன் கூடிய அடையாள அட்டைகள் நம் ஆட்சியில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அட்டைகளை நீங்கள் வாங்கியிருப்பீர்கள், இந்த அட்டைகளை முறையாகப் பயன்படுத்துங்கள். இந்த அட்டைகளைப் பயன்படுத்தி உங்களின் குழு தயாரிக்கின்ற பொருட்களை 25 கிலோ வரை 100 கிலோமீட்டர் தூரத்துக்கு நீங்கள் எந்தவிதக் கட்டணமும் இல்லாமல் எடுத்துச் சென்று விற்பனை செய்ய முடியும். இன்றைக்குக் கடன் இணைப்பு பெற்றுள்ள சகோதரிகளாகிய நீங்களும் பொருளாதாரத் தன்னிறைவு பெற்ற தொழில் முனைவோராக வர வேண்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

அடுத்து இந்த விழாவில் ‘கலைஞர் கனவு இல்லத்திற்கான’ ஆணைகளும், வீட்டு மனைப் பட்டாக்களும் வழங்க இருக்கிறோம். குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கித் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய குடிசை வீடுகளை எல்லாம் கான்கிரீட் வீடுகளாக மாற்றியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அப்படிப்பட்ட கலைஞரின் பெயரில் நம் முதலமைச்சர் அவர்கள் சாமானிய மக்களுக்கான வீடுகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

### 21 லட்சம் மக்களுக்கு பட்டா

குடியிருக்க வீடு எவ்வளவு முக்கியமோ, அதேபோல அந்த வீட்டுக்கான பட்டா மிக மிக முக்கியம். ஆகவே பட்டா கொடுக்கின்ற நடைமுறைகளையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் எளிமையாக்கினார்கள். அதனால்தான் இந்த ஐந்து ஆண்டுகளில் 21 லட்சம் மக்களுக்கு நம் முதலமைச்சர் பட்டா கொடுத்திருக்கிறார்கள். பட்டா என்பது உங்களுக்கு அரசு கொடுக்கின்ற சலுகை கிடையாது, அது உங்களின் உரிமை. அந்த உரிமையை நம் அரசு இன்றைக்கு நிலைநாட்டியிருக்கிறது. இனிமேல் உங்களின் வீடுகளில் மகிழ்ச்சியோடு நிம்மதியாக நீங்கள் தூங்கலாம். ஆகவே பட்டா பெற்ற உங்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்கே நிறைய மாற்றுத்திறனாளிகள் வந்திருக்கிறீர்கள். மாற்றுத்திறனாளிகளான உங்களுக்கு வேண்டியது சலுகை இல்லை, உரிமை என்று நம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில்தான், தமிழ்நாடு முழுக்க உள்ளாட்சி அமைப்புகளில் நியமன உறுப்பினர்களாக மாற்றுத்திறனாளிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் கேட்கின்ற இடத்திலிருந்து மற்றவர்களுக்குக் குரல் கொடுக்கின்ற இடத்துக்கு வந்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு இன்றைக்கு மோட்டார் வாகனம் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை நம் அரசு கொடுத்திருக்கிறது. ஆகவே மாற்றுத்திறன் தோழர்களுக்கு இந்த அரசு என்றைக்கும் பக்கபலமாக இருக்கும்.

### கோரிக்கைகள் நிறைவேற்றம்

நம் முதலமைச்சர் அவர்கள் மீனவ மக்களின் கோரிக்கைகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள். தமிழ்நாடு முழுக்கக் கடலோர மீனவ கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியிருக்கிறோம்.

மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், மீன் சந்தைகள் எல்லாம் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மீன்பிடித் தடைக்காலத்திற்கான நிவாரணத் தொகை 5,000-லிருந்து நம் முதலமைச்சர் அவர்கள் 8,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இன்று தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 4 கோடி மதிப்பீட்டில் விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்க அடிக்கல் நாட்டியிருக்கிறோம்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, திருவைகுண்டம் தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறு விளையாட்டு அரங்கம் (Mini Stadium) உட்பட சுமார் 8 கோடி மதிப்பீட்டில் பல்வேறு விளையாட்டுக் கட்டமைப்புகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுக் கட்டமைப்புகள் இன்னும் அதிகமான விளையாட்டு வீரர்களைத் தூத்துக்குடியிலிருந்து நிச்சயம் உருவாக்கும். அதற்கு என் வாழ்த்துகள்.

இப்படித் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துப் பிரிவு மக்களுக்குமான ஒரு ‘ஆல்ரவுண்டர்’ ஆட்சியாக நம் திராவிட மாடல் ஆட்சி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நேற்றைக்குச் சென்னையில் நடந்த ‘கனவு மெய்ப்படும்-2030’ நிகழ்ச்சியில் நம் முதலமைச்சர் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 2030-க்குள் கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் மீண்டும் 7 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

இதுவரை 3 லட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 2030-க்குள் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் 100 சதவிகிதம் ‘ஸ்மார்ட்’ வகுப்பறைகள் அமைக்கப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கின்ற மாவட்டங்களில் திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Centre) அமைக்கப்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களிடையே பள்ளி இடைநிற்றல் முற்றிலும் நிறுத்தப்படும். மாவட்டந்தோறும் நவீனத் தொழில் பூங்காக்கள் (Industrial Parks) அமைக்கப்படும். இது போன்ற அறிவிப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் நேற்று வெளியிட்டிருக்கிறார்கள்.

### திராவிட மாடல் 2.0

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்னும் ஏராளமான திட்டங்களை, திராவிட மாடல் 2.0-இல் நிச்சயம் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு வழங்குவார். ஆகவே நம் முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் எப்போதும் போல உங்களின் ஆதரவைத் தர வேண்டும். நலத்திட்டங்களைப் பெற்ற உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதாராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா, மார்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன்பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் பிரியங்கா ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் ரவிச்சந்திரன், கழக நிர்வாகிகள் ஆனந்தசேகரன், இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, செல்வராஜ், ராஜ்மோகன், அருண்சுந்தர் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.